ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2453/21 - 2025 සැප්තැම්බර් මස 10 වැනි බදාදා - 2025.09.10

2453/21 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MA/LND/AC/378.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மகரகம பிரதேச செயலாளர் பிரிவின், இல. 496, கொட்டாவை தெற்கு கிராம அலுவலர் பிரிவின், கொட்டாவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடஸ்திரல் வரைபட இல. 521416 இனைக் கொண்ட வலய இல. 03, பத்திர இல. 01 ஆக காட்டப்பட்டுள்ள காணியின் விஸ்தீரணம் 1. 9266 ஹெக்டயார் அளவான இணைப்பில் குறிப்பிடப் படும் எல்லைகளைக் கொண்ட காணித் துண்டுகள்:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: கல்கந்தவெல; விபரம்: வயல்; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 1.7687 ஹெக்டயார்

**துண்டு இல. 02**

காணியின் பெயர்: கல்கந்தவெல; விபரம்: சதுப்பு நிலம், உடைந்து விழுந்த கட்டிடம்; உரிமை கோருநர்: அரசு; ஆரம்ப உரிமை கோருநர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0. 1579 ஹெக்டயார்

மேற்குறிப்பிடப்பட்ட காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மு.ப. 10.00 மணிக்கு மகரகம பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஹிரிபிட்டியகே ரஞ்ஜிகா
ஹிமாலி கருணாரத்ன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
மகரகம.

பிரதேச செயலகம்,
மகரகம,
2025, ஓகத்து 29.

EOG 09 - 0083

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.